மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சீஃப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் (ஹெல்த் அன்ட் சேப்டி) என்பவருக்குக் கீழே அவர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய சான்றிதழ் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு தனியாக மருத்துவப் பிரிவைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போதுதான் தனியாக மருத்துவர்களை இந்தப் பிரிவுக்குப் பெற்றிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய யோசனைகளைப் பரிசோதனை செய்து பார்க்கலாம்.

தமிழக அரசிற்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டுள்ள துளைபோடும் கருவி.

166—(*வினா எண். 16212) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசிற்கு ஆயிரம் அடிக்கு அதிகமாகத் துளை போடும் மிஷின் ஒன்றை வெளிநாடு அன்பளிப்பாக அளித்துள்ளதற்கு மத்திய அரசின் சுங்க இலாகா பலகோடி ரூபாய் சுங்கத் தீர்வையாக வசூலித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): டானிஷ் நாட்டின் வெளிநாட்டு உதவி திட்டத்தின் கீழ் உப்பு கரிப்பு அதிகம் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக 4 துளைக் கருவிகள் தமிழ்நாட்டிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான சுங்கவரியாக ரூ. 168.50 லட்சம் மாநில அரசால் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த துளை போடும் கருவிகளைத் தமிழக மக்களுக்கு வெளிநாட்டிலுள்ளவர்கள் இனாமாக அளித்திருக்கிறார்கள். அப்படி இனாமாக அளிக்கப்பட்ட இந்த கருவிகளுக்கு கிட்டத்தட்ட மூன்றரை கோடி ரூபாய் கொடுக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னதாக நினைக்கிறேன். சுங்க இலாகா இதற்கு வரி கொடுக்கவேண்டுமென்று கட்டியிருப்பதாக கருதுகிறேன். அரசாங்கத்திற்கு இனாமாக கொடுக்கப்பட்டதை மத்திய அரசிடம் விஷயங்களை எடுத்துக் கூறி அவைகளை திரும்பப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா ? மத்திய அரசாங்கம் என்ன பதில் சொல்லியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 5]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு நல்ல பதில் சொல்லியிருக்கிறது. மத்திய அரசு குடிநீர் பணிகளுக்கென துணை வரிகளுக்கு 23-6-1983 முதல் சுங்க வரி விதி விலக்கு அளித்துள்ளது. டேனிடா ரிக்குகளுக்கு 24-6-1983-க்கு முன்னால் சுங்க வரி கொடுத்துள்ளது. மத்திய அரசின் எக்சம்ஷன் தேதிக்கு முன்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. சுங்க வரியைத் திருப்பி அளிக்குமாறு கோரப்பட்டுடுள்ளது. இதற்கான சாத்தியக் கூறுகள் இருந்தால், துரிதப்படுத்தி, மான்யத் தொகையை அதிகரித்து, செலுத்தப்பட்ட தொகைக்கு ஈடாக அதிக மான்யம் அளிக்கவும், மத்திய அரசு கோரப்பட்டுள்ளது. மத்திய அரசின் முடிவு நல்ல முடிவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, எக்சம்ப்ஷன் கொடுக்கப்பட்ட காலத்தை நீட்டிக்கப்பட்டது ஒரு புறம் இருக்கட்டும். ஏற்கனவே கட்டப்பட்ட பணத்தை மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமே தவிர, மான்யம் அதிகம் கேட்பது வேறு விஷயம். இது ஒரு கொள்கைப் பிரச்சினை என்ற அடிப்படையில் மக்கள் நலனுக்காக இனாமாக ஒரு நாடு கொடுக்கின்ற பொருளுக்கு, அதற்கு மத்திய அரசு சுங்க வரியிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டுமென்ற வற்புறுத்தலுக்கு மாநில அரசு தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லவில்லை என்று கருதுகிறேன். விதி விலக்கு கொடுக்கப்பட்டது 23-6-1983. இதற்கு முன்னதாக கொடுக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அப்படி கொடுக்கவில்லை என்று சொன்னால், விதி விலக்கு மாற்று யோசனையை தெரிவித்து இருக்கிறோம். எப்படியும் பெற்றுவிட வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி விலக்கு கோரி இருப்பதாக சொன்னார்கள். அந்த தேதிக்கு முன்னே பணம் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். மத்திய அரசுக்கு மாநில அரசாங்கம் 1,500 ஏக்கர் மற்ற துறைகளுக்கு இலவசமாகக் கொடுத்துக் கொண்டு வருகிறது. இந்தக் காரணங்களைச் சுட்டிக்காட்டி, இப்படி வெளிநாடுகளிலிருந்து பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற பொருளுக்கு முழு வரி விலக்கு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: இந்த வற்புறுத்தலில் தமிழக அரசிற்கு தனித் திறமை இருக்கிறது. மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியன் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அப்படி வற்புறுத்துவதன் காரணமாகத்தான் ஒரு தேதியிட்டு, இனிமேல் வசூலிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதில் வெற்றி பெறுவோம் என்று நம்புகிறோம்.

காஞ்சிபுரம் நகரத்திற்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

167—(*வினா எண் 18449) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகரத்தில் தற்போதைய குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்ய அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் நகராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஆய்வு வேலைகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முடித்து விட்டது. இதற்கான திட்ட அறிக்கை வாரியத்தினால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: இந்த குடிநீர் திட்டத்திற்காக, எந்தெந்தப் பகுதிகளிலிருந்து தண்ணீர் எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது? ஏற்கனவே மேட்டுக் குப்பம், முசரக் குப்பம் போன்ற இடங்களில் விவசாயப் பணிகளுக்காக எடுக்கப்பட்ட ஆழ் துளைக் கிணறுகள் இருக்கின்றன. அந்தக் கிணறுகளை இந்தக் குடிநீர் திட்டத்தில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நகராட்சி வேண்டுகோளின்படி 1982 ஆம் ஆண்டில் 1.21 இலட்சத்தில் ஆய்வு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. '' தட் இஸ் இன் வெஸ்டிகேஷன் '' — வாரியத்தால் அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் தொகையை காஞ்சிபுரம் நகராட்சி, வாரியத்திற்கு செலுத்திவிட்டது. விரைவான ஆய்வுகள் வாரியத்தால் செய்யப்பட்டு, முடிந்து விட்டன. இதற்கான திட்ட அறிக்கை 1984-85-க்கு வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. வாரியம் தயார் செய்து அரசிற்கு வரும்போது மற்றைய சோர்ஸ் என்ன? ஸ்கீமினுடைய காஸ்ட் என்ன என்ற தகவல்கள் எல்லாம் கிடைக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS